**செய்தி வெளியீடு எண்: 193** **நாள்: 14.03.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 13.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் 2 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில முதன்மை நிலை பளுதூக்கும் மையத்தினை (Tamil Nadu State Weightlifting Centre of Excellence) விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி (Video Conference) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 25.9.2015 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பளு தூக்கும் போட்டியில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் காமன்வெல்த், ஆசிய, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் வேலூர் மற்றும் அதன் சுற்றுப் புறத்திலிருந்து உருவானவர்கள். பளு தூக்கும் போட்டியில் சர்வதேச அளவில் பேசப்படும் இடமாக வேலூர் பகுதி விளங்கி வருவதால், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில், 1992–ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் சிறப்பு நிலை பளு தூக்கும் பயிற்சி மையம் துவங்கப்பட்டது. மேலும், பல வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், பதக்கம் வெல்ல ஏதுவாக, இப்பயிற்சி மையம் 2 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் முதன்மை நிலை பயிற்சி மையமாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் 2 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில முதன்மை நிலை பளுதூக்கும் மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த தமிழ்நாடு மாநில முதன்மை நிலை பளுதூக்கும் மையக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய சர்வதேச அளவிலான 6 பளுதூக்கும் பயிற்சி மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மேடைகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே நேரத்தில் 50 நபர்களுக்கு மேல் பயிற்சி பெறலாம். இந்த முதன்மை நிலை பயிற்சி மையத்திலேயே தங்கி பயிற்சி பெற விரும்பும் வீரர்கள் மற்றும்

வீராங்கனைகள் தங்குவதற்கு ஏதுவாக, முதல் தளத்தில், அறைக்கு 6 நபர் வீதம் 25 பெண்களுக்கான 4 தங்கும் அறைகள், இரண்டாம் தளத்தில், அறைக்கு 6 நபர் வீதம் 25 ஆண்களுக்கான 4 தங்கும் அறைகள், என மொத்தம் 8 அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த கட்டடம் படிக்கும் அறை, மருத்துவ அறை, குளியலறைகள், கழிவறைகள், மற்றும் பயிற்சிக்காக அதிநவீன பளுதூக்கும் உபகரணங்கள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த முதன்மை நிலை பளுதூக்கும் மையத்தின் மூலம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் சிறப்பு பயிற்சி பெற்று தங்கள் திறனை வளர்த்துக்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச பளுதூக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் வெல்ல ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 14.3.2018